[1995 மார்ச் 15

16—

பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு சென்னையில் ஒரு மண்டல மையம் அமைத்தல்

*38266—**திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு சென்னையில் ஒரு மண்டல மையம் அமைக்க மைய அரசைத் தமிழக அரசு கேட்டுக் கொள்ளுமா?

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் ஒரு மண்டல மையம் அமைக்க, பல்கலைக்கழக மானியக் குழுவை தமிழக அரசு கேட்டுக் கொண்டது. தற்போது ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில், மேற்படி மண்டல மையத்தை நிறுவ இருப்பதாக பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்துள்ளது. இந்த முடிவினை மறுபரிசீலனை செய்ய பல்கலைக்கழக மானியக்குழுவை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதுகுறித்த விவரங்களை நேற்றும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்திருந்தேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே உங்களுடைய அனுமதியைப் பெற்றதற்கிணங்க, தமிழக முதலமைச்சருக்கு, 'சதாப்தி' ரயிலைக் கோவைக்கு விடுவதற்கான முயற்சிகள் மேற்கொண்டதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அளித்த பதிலிலே திரு. ராமி ரெட்டி அவர்கள் சென்னைக்கு வந்தபோது, அவருக்கு அளித்த விருந்தினைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால், என்னுடைய ஆசையெல்லாம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், எப்படியாகிலும் திரு. ராமி ரெட்டி அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் சந்திக்க வைத்து, இந்தப் பிரச்சினையைக் குறித்துப் பரிசீலித்திருந்தால் ஓரளவு வெற்றி நிச்சயமாகக் கிடைத்திருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இன்றைக்கு அகில இந்திய அளவிலே, All -India Council for Assessment and Accreditation என்ற ஒரு

1995 மார்ச் 15]

நிறுவனத்தை துவக்கி இருக்கிறார்கள். ஆனால், அந்த நிறுவனம்கூட, பெங்களூரிலேதான் துவங்கப்பட்டிருக்கிறது. ஆக, தென்மாநிலம் என்று சொன்னால், பெங்களூர்தான் என்று சொல்கிற அளவுக்கு நிலைமை உருவாகி வருகிறது. இன்றைக்கு யு.ஜி.சி.-க்கு வழங்கப்பட்டிருக்கிற 'ரீஜினல் சென்ட' ரிலே ஒரிசா மாநிலம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆக, என்னுடைய கேள்வி எல்லாம், இப்படி இந்த 'ரீஜினல் சென்ட' ருடைய பரப்பளவை விரிவுபடுத்துகிற காரணத்தினாலே, மேலும் ஒரு 'ரீஜினல் சென்ட' ரைத் துவக்குவதற்காக, தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள முன்வருமா என்பது என்னுடைய கேள்வி. அதற்குக் காரணம், நாம் ஏற்கெனவே, AICTE i.e., All -India Council for Technical Education-ஐ, சதர்ன் ரீஜினல் சென்டரை, சென்னையிலே வைத்திருந்தோம். ஆனால், அது இரண்டாகப் பிரிக்கப்பட்டு 'சவுத் வெஸ்டர்ன் ரீஜன்' என்று கேரளாவையும், கர்னாடகாவையும் இணைத்து, அதனுடைய தலைமையகத்தை பெங்களூரிலே வைத்துக் கொண்டார்கள். ஆக, தென் மாநிலம் என்று சொன்னால், பெங்களூர் என்ற நிலைமை மாறி, தென் மாநிலம் என்று சொன்னால், தமிழகம் என்று சொல்கிற அளவுக்கு அரசு மேலும் ஒரு 'ரீஜினல் சென்டரைக் கேட்க முன்வருமா' என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் தென் மண்டல மையம் அமைவதற்காக, 1989-லிருந்தே இந்த அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. அர்ஜுன்சிங் அவர்களுக்கு Minister for Human Resources Development நேரடியாக இதுகுறித்து ஒரு கடிதம் அனுப்பினார்கள். அந்தக் கடிதம் 17.1.1994 அன்று அங்கே பெறப்பட்டிருக்கிறது. அதற்கு, மாண்புமிகு திரு. அர்ஜுன்சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, 22 ஏப்ரல், 1994 அன்று ஒரு பதில் கடிதத்தை அனுப்பி இருக்கிறார்கள்...

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[*1995 மார்ச் 15*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் இங்கே படித்துக் காட்டுவது சரி என்று நினைக்கிறேன்.

"Dear Dr. Jayalalitha,

Please refer to your D.O. No. 84296/NU 11/93 of January, 14 of 1994 regarding opening of a Regional Office of University Grants Commission at Madras. I have had the matter looked into. The University Grants Commission has taken a decision in principle to set up its Regional Officers. An Empowered Committee has been constituted to look into various issues relating to the matter such as location of these Offices, requirement of infrastructural facilities, operational framework etc. Your letter under reference has been forwarded to the Chairman, U.G.C. for appropriate consideration.

With regards.

Yours sincerely,

(Sd.) Arjun Singh."

இப்படிக் கடிதமும் வந்திருக்கிறது. அதனை அடுத்து, நினைவூட்டுக் கடிதங்கள் பல அனுப்பப்பட்டு இருக்கின்றன. *25-10-1994*-ல் இங்கிருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கும் இதைப் போலவே பதில் வந்தது. *12-12-94* மற்றும் *1-2-95* ஆகிய நாட்களில் நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. இருப்பினும் புதிதாக மற்றொரு மையத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஓர் அலுவலர் என்னை நேரிலே சந்தித்த நேரத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார். இது தொடர்பாக பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு தமிழக அரசு மீண்டும் கடிதம் எழுதியிருக்கிறது.

திரு. வி. கே. லட்சுமணன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி எல்லாம், யு.ஜி.சி. சேர்மன் சென்னைக்கு வந்தபோது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், முதலமைச்சரைச் சந்திக்க வைக்க ஏற்பாடு செய்திருந்தால், இந்தப் பிரச்சினை எளிதாகத் தீர்ந்திருக்குமே என்ற ஆதங்கத்தைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1995 மார்ச் 15]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக நல்கைக் குழுவின் தலைவர் எதிர்பாராத வகையில் திடீரென்று இங்கே வந்தார். வந்த நேரத்திலே ஒருநாள் மாலை கல்வி அமைச்சரைச் சந்திக்க வேண்டுமென்று தெரிவித்தார். ஆகவே அந்தச் சந்திப்பு நடைபெற்றது. இப்போது அவர் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக இல்லை.. மரியாதைக்குரிய பெண்மணி ஒருவர் தலைவராக இருக்கிறார். அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சந்திக்கின்ற வாய்ப்பு அமையுமானால், அதை ஏற்படுத்துவதற்குக் கல்வித் துறை எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

17—

திருப்பத்தூர் தொகுதியில்

அரசு தொழிற்பயிற்சி மையம் தொடங்குதல்

**33720--*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி மையம் (I.T.I.) தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தாலூக்கா மிகவும் பின்தங்கிய தாலூக்கா. அங்கே படித்த இளைஞர்கள் அதிகம்